26

6 JUL 1945

Registered No. M. 4018.

உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 7 | July 1945 | No. 7

விஷய சூசிகை. **பக்கம்**

நிகிலபாரத ஆயுர்வேத மண்டலத்தலைவர் அவர்கள் தென் இந்தியா யாத்திரை	1
யோகரத்நாகரம்	27 – 36

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
„ „ ½-க்கு ரூ 4
„ „ ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

5, West Masi Street, Madura.

காபிரைட்] [விலை 0—3—0

...ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை — 45.

JL
L:5ணை21"; M25VC.
M45.7.7.

அகில இந்திய ஆயுர்வேத மஹாமண்டலத்தலைவர் ஸ்ரீமான் M. K. மூக்கர்ஜி அவர்களின் தென்-இந்தியா யாத்திரை.

1945 ஜனவரி 30உ சாயங்காலம் தலைவர் அவர்கள் மதுரை வந்தார்கள், அச்சமயம் மதுரை ரெயில்வேஸ்டேஷனில் சுதேச வைத்யசபை காரியதரிசி ஸ்ரீ T. S சுப்பிரமணியம், ஆர்யவைத்தியர் வாரியார், வைத்தியசந்திரிகை ஆசிரியர் பண்டிட் நாராயணய்யங்கார் முதலியவர்கள் மாலையிட்டு தலைவர் அவர்களை வரவேற்றனர் 1945ளு பிப்ரவரிமீ 1உ சாயங்காலம் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அம்பொழுது ராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் & செஷன்ஸ் ஜட்ஜ் ஸ்ரீமான் A. S P. அய்யர் அவர்கள் M. A. I. C. S தலைமை வகித்தார்கள். மதுரை எட்வர்ட்ஹால் மைதானத்தில் அக்கூட்டம் நடந்தது. நகரத்திலுள்ள பிரமுகர்களும் உத்யோகஸ்தர்களும் ஏராளமாக விஜயஞ்செய்திருந்தனர், மதுரை சுதேச வைத்ய சபையார் தலைவர் அவர்களுக்கு வடமொழியில் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்து சமர்ப்பித்தனர், ஷை சபையால் தலைவா அவர்களுக்கு "வைத்ய வாசஸ்பதி" என்ற கௌரவ பட்டமும் அளிக்கப்பட்டது மண்டலத்தலைவர் ஸ்ரீ முக்சர்ஜி அவர்கள் உபன்யாசம் சபையோர்கள் மனதிலும் சபைத்தலைவா மனதிலும் நன்கு பதிந்தது ஸ்ரீமான் அய்யர் அவர்கள் இயற்றிய "Three Men of Destiny" என்ற புத்தகம் மண்டலத்தலைவர் அவர்களுக்கு மதுப்பிற்கடையாளமாக ஸ்ரீ A. S. P. அய்யர் அவர்களால் அளிக்கப்பட்டது. மண்டலத்தலைவர் அவர்கள் உபன்யாசம் ஜனங்களிடையே மிகவும் உத்சாகத்தை யுண்டுபண்ணியதால் மறுநாளும் ஓர் பொதுக் கூட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டது. A R High School ல் ஷை பொதுக்கூட்டம் நடந்தது, பொறுக்கி எடுத்த அபிமானிகள் விஜயம்செய்திருந்தனர். ஷை தினத்தில் பொதுக்கூட்டம் முடிந்தவுடன் அந்த ஹைஸ்கூலில் தேகப்பயிற்சி செய்துகொண்டிருந்த ராஷ்டிரீய சேவாசங்கத்தின் மாணவர்களுக்கு ஷையார் வேண்டுகோளுக்கிணங்கி ஓர் சிறு உபன்யாசம் செய்யப்பட்டது. மாணவர்கள் செய்த மரியாதையைப் பெற்றுக்கொண்டு ஆயுர்வேத முறைப்படி சுகாதாரம், மதம் சேவை, இலவைகளைப்பற்றி மாணவர்கள் மனதில் நன்கு பதியும்படி சில வார்த்தைகள் சொல்லப்பட்டன. பிப்ரவரிமீ 2உ மதுரை அமெரிக்கன் காலேஜ் சம்ஸ்கிருத அசோசியேஷனைச்சேர்ந்தவர்கள் "ஸம்ஸ்கிருத கல்வியைப்பற்றி ஓர் உபன்யாசம் செய்யும்படி ஸ்ரீ முக்காஜி அவர்களை வேண்டிக்கொண்டனர். ஷை காலேஜ் பிரின்ஸ்பால் அவர்கள் தலைமையில் ஷை காலேஜில் உபன்யாசம் நடைபெற்றது. காலேஜ் மாணவர்கள் உபாத்தியாயர் இவர்களும் மற்றும் வைத்யர்களும் பிரமுகர்களும் ஷை கூட்டத்திற்கு பிரசன்னமாகவிருந்தனர். தலைவர் அவர்கள் ஹிந்துஸ்தான் பிரதேசத்தில் சமஸ்கிருதக்கலா வளர்ச்சிக்காக ஸம்ஸ்கிருதமே தேசப் பொதுபாஷையாக இருக்கலாமென்று அதோடு உருது கலக்காத தனி ஹிந்தியும் பொதுபாஷையாக இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப்பேசினார்.

210247

மஞ்சிஷ்டி, திரிபலை, வெள்ளைகாக்கணட்டான், கட்பீத்தோல், திரிகடு, ஞாழல், வாகை, மஞ்சள், மரமஞ்சள், இவைகளைச் சமவெடை எடுத்து வெள்ளாட்டு மூத்திரத்தால் அரைத்து அல்லது கோமூத்திரத்தால் அரைத்து சரீரத்தில் பூச சகல காய்ச்சல்களும் தணியும். குறிப்பு—இதில் "கட்பீ" என்பது தென்னாட்டில் கிடைக்காத சரக்கு. அதைவிட்டு மற்ற சரக்குகளைக்கொண்டு இந்த ப்ரலேபத்தைச் செய்யலாம். காய்ச்சலில் தலைவலி முதலிய உபத்ரவங்களில் தலைக்கு இந்த "பற்றை"ப் போடலாம். உடம்பு வலிக்கும் உபயோகிக்கலாம். இது மேலுக்கு மாத்திரம் உபயோகிக்கும் மருந்து. இனி கஷாயங்கள் சொல்லப்படுகின்றன. பித்தப்பிரதான சன்னிபாதங்களில் கஷாயங்கள் சொல்லப்படுகின்றன—துவாத்ரிம்சதங்கம்—சிறுதேக்கு, நிலவேம்பு, வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, வசம்பு, திரிகடு, ஆடாதோடை, பேய்கொம்மட்டி வேர், ஆத்தை, நன்னாரி வேர், பேய்ப்புடல், தேவதாரு, மஞ்சள், பாதிரி, பெருவாகை, பிரம்மி, மரமஞ்சள், சீந்தில், சிவதை, அதிவிடயம், சாதாகோஷ்டம், மருக்கொன்றை, கண்டங்கத்திரி, முள்ளி, வெப்பாலையரிசி, திரிபலை, பூலாங்கிழங்கு, ஆகிய இவைகளைச் சமவெடை எடுத்து இடித்துக் கஷாயம் செய்து கொடுக்க பதின்மூன்று சன்னிகளும், சூலம், காஸம், விக்கல், மலதுவாரத்தில் வலி, வயிற்றுப் பொருமல், ஊருஸ்தம்பம், குடல்வாதம், தொண்டை நோய், அரோசகம், மூட்டுகளின் பிடிப்பு, ஆகிய இவை போம். அஷ்டாதசாங்கம்—நிலவேம்பு, தேவதாரு, தசமூலம், சுக்கு, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, வெப்பாலையரிசி, கொத்தமல்லி விதை, யானைத்திப்பிலி, ஆகிய இவைகளின் கஷாயம் கொடுக்க தந்திரை, புலம்பம், காஸம், அரோசகம், எரிச்சல், மயக்கம், சுவாஸம், ஆகியவை விலகும். பஞ்சதிக்தம்—கண்டங்கத்திரி, சாதாகோஷ்டம், நிலவேம்பு, சீந்தில், சுக்கு, ஆகிய இவைகளின் கஷாயம் சகல ஜ்வரங்களையும் போக்கும். தார்வியாதி—மரமஞ்சள், கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, திரிபலை, கண்டங்கத்திரி, பேய்ப்புடல், மஞ்சள், வேப்பம்பட்டை, ஆகிய இவைகளின் கஷாயம் மயக்கத்தில் நன்மை செய்யும். இனி கப பிரதான சன்னிபாதங்களில் கஷாயம் சொல்லப்படுகின்றது—கிராந்தியாதி— தேசாவரம்,

வெப்பாலையரிசி, தேவதாரு, வாய்விளங்கம், சிறுதேக்கு, கரிப்பான், திரிகடு, கொடுவேலி, கட்பலம், சாதாகோஷ்டம், அரத்தை, கடுக்காய், கண்டங்கத்திரி, முள்ளி, ஓமம், சடாமாஞ்சி, நிலவேம்பு, வசம்பு, செவ்வியம், வாசனைப்புல், ஆகிய இவைகளின் கஷாயம், சன்னிபாதங்கள், நினைவு தடுமாற்றம், வியர்வை, சைத்தியம், புலப்பம், வலி, வயிற்றுப்பொருமல், விப்புருதி, சூதிகாரோகங்கள், வாத நோய்கள் ஆகிய இவைகளைப் போக்கும். வாதப் பிரதான சன்னி பாதங்களில் கஷாயங்கள் சொல்லப்படுகின்றன அர்காதி—எருக்கம் வேர், நன்னாரி, நிலவேம்பு, தேவதாரு, அரத்தை, கொச்சித்தழை, வசம்பு, தழுதாழை, முருங்கைப்பட்டை, திப்பிலி, தேசாவரம், செவ்வியம், கொடுவேலி, சுக்கு, அதிவிடயம், கரிப்பான், ஆகிய இவைகளின் கஷாயம் கொடுக்க திரிதோஷஜ்வரங்களைப் போக்கும். தனுர்வாதம், பல்கிட்டிப்போதல், சைத்தியம், சுவாஸம், காஸம், சூதிகாரோகங்கள், ஆகிய இவை போம். அர்காதி—எருக்கம்வேர், தேசாவரம், முருங்கைப்பட்டை, தேவதாரு, செவ்வியம், நொச்சியிலை, திப்பிலி, அரத்தை, கரிப்பான், சாரணத்தி, கொடுவேலி, வசம்பு, நிலவேம்பு, சுக்கு. ஆகிய இவைகளின் கஷாயம் கொடுக்க திரிதோஷங்கள், சுரணையின்மை, சூதிகாரோகங்கள், சைத்தியம், அபஸ்மாரம், ஆகிய இவை போம். தசமூலம்—வில்வ வேர், முன்னைவேர், பெருவாகை வேர், நிலக்குமிழம் வேர், பாதிரி வேர், ஓரிலை வேர், மூவிலை வேர், சிறுநெரிஞ்சி வேர், முள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், ஆகிய இவை தசமூலமெனப்படும். இவைகளைக் கஷாயம் செய்துகொடுக்க சுவாஸம், சன்னி, ஆகிய இவை போம். தசமூல்யாத்யஷ்டாதசாங்கம்—தசமூலம், பூலாங்கிழங்கு, கார்காடகசிருங்கி, சாதாகோஷ்டம், சிறுகாஞ்சொரி, சுக்கு, வெப்பாலையரிசி, பேய்ப்புடல், கடுகுரோகிணி, ஆகிய இவைகளின் கஷாயம் காஸம், மார்பு பிடிப்பு, இரண்டு பக்கங்களின் வலி, சுவாஸம், விக்கல், வாந்தி, ஆகிய இவைகளைப் போக்கும். லசுனாதி—உள்ளிப் பூண்டு, கடுகுரோகிணி, காண்டம், சிறுதேக்கு, அதிவிடயம், இவைகளை மனிதன் மூத்திரத்தால் கஷாயம் செய்து உபயோகிக்க சன்னி பாதம் போம். குறிப்பு—இங்கு காண்டம் என்பது சதுரக்கள்ளியைக் குறிக்கும். இந்தக் கஷாயத்தை உள்ளுக்கு உபயோகிக்கக்

6 JUL 1945
MADRAS

கூடாது. பிரஞ்ஞையற்றிருக்கும் காலத்தில் மூக்கில் நஸ்யம் செய்யலாம் இனி சந்திகம் முதலிய சன்னிகளுக்குத் தனித்தனி சிகித்சை சொல்லப்படுகிறது. ஸந்திகம் என்ற சன்னியில் முதலில் பட்டினி பிறகு வியர்வை பிடித்தல், பஞ்சமூலகல்கம், திப்பிலி, இவைகளுடன் கூடிய கஞ்சி குடித்தல், கொள்ளு கஷாயத்தில் இந்துப்பு, சுக்கு, இவைகளைச் சேர்த்துச் சாப்பிடுதல், ஆகிய இவை நன்மை செய்யும். ராஸ்நாதி கஷாயம்—அரத்தை, சீந்தில், பூலாங்கிழங்கு, விருத்ததாரு, தேவதாரு, சுக்கு, திரிபலை, தண்ணீர் விட்டான், ஆகிய இவைகளைச் சமஎடை எடுத்துக் கஷாயம் செய்து அதில் ⅛ தோலா குக்கில் சேர்த்துச் சாப்பிடவும். ராஸ்நாதி—அரத்தை, சுக்கு, சீந்தில், மருதோன்றி, கோரைக்கிழங்கு, தண்ணீர் விட்டான், கடுக்காய், தேவதாரு, கடுகுரோகிணி, கச்சோலர், (கச்சோலம் என்னும் கடைச்சரக்கு வடதேசத்தில் கிடைக்கும். தமிழில் பெயர் இல்லை.) ஆடாதோடை, ஆமணக்கு வேர், தசமூலம், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிட கழுத்துப் பிடிப்பு, குடல்வாதம், காய்ச்சல்கட்டி, இடுப்புவலி, ஆகிய இவை நீங்கும். அமிருதாதி—சீந்தில், ஆமணக்கு வேர், கடுக்காய், தேவதாரு, அரத்தை, கடுக்காய், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிட சகல வாத ரோகங்களும் சமிக்கும். க்ரந்திகாதி—தேசாவரம், தானிக்காய், கடுக்காய், புங்கைப்பட்டை, நெல்லிக்காய், ஆடாதோடை, இவைகளைக் கஷாயம் செய்து அதில் விளக்கெண்ணை சேர்த்துச் சாப்பிட வாதங்களும் விலகும். ருக்தாஹம்—ஜலதராதி-கோரைக்கிழங்கு, சிகப்பு சந்தனம், சுக்கு, வெட்டிவேர், விலாமிச்ச வேர், பர்பாடகம், இவைகளின் கஷாயத்தைச் சாப்பிடவும். பதரீபல்லவாதி—இலந்தைத் துளிரை அரைத்து அதில் சந்தனவிழுது, வேம்பு நுரை, இவைகளையும் சேர்த்துக் கலந்து இரண்டு உள்ளங்கால்களிலும் தடவ குணமாகும். தான்யகாதி—இராத்திரியில் ஜலத்தில் கொத்தமல்லி விதையைப் பொடித்துப் போட்டு இராத்திரி முழுவதும் மூடிவைத்திருந்து காலையில் வடிகட்டி சர்க்கரை சேர்த்துச் சாப்பிட உள் எரிச்சல் தணியும். குறிப்பு—மல்லிவிதை தோலா நான்கு பொடி செய்து ஆறு பங்கு

குளிர்ந்த ஜலத்தில் போடவேண்டும். வடிகட்டி எட்டு தோலா கஷாயம் சாப்பிடவேண்டும். பிராஹ்மியாதி—பிரமி, திராக்ஷை, கோரைக்கிழங்கு, வசம்பு, விலாமிச்ச வேர், சரக்கொன்றை புளி, கடுகுரோகிணி, கடுக்காய், நெல்லிவத்தல், தான்றிக்காய், குருந் தொட்டி, வேப்பம்பட்டை, கோசாதகி, தசமூலம், ஆகிய இவை களின் கஷாயம் வாத ரோகங்களையும் தணிக்கும். அகர்வாதி—அகில், பச்சைக்கர்ப்பூரம், ஆனைவணங்கி (இது தேவதாருவில் ஓர் பேதம்) நகம், (நகமென்பது இருவிதம். ஓர் பிராணியின் நகத்திற் கும் பெயர். இது வாசனைச் சரக்குகளில் சேருகின்றது. சாதா ரணமாய் எல்லா கடைகளிலும் கிடைக்கும். அதைச் சாணிப்பாலில் சுத்தி செய்து பசு நெய்யில் ஜீரகத்தை இளவறுப்பாக வறுத்து ஜீரகத்தை மாத்திரம் தள்ளிவிட்டு அந்த நெய்யில் ஷடி சுத்தம் செய்த நகத்தை ஈரமில்லாமல் உலர்த்திய பிறகு போட்டு வத் தல்போல வறுக்க நல்ல வாசனையுண்டாகும். இதைப் பொடி செய்து வாசனைச் சரக்குகளில் அல்லது தைலங்களில் சேர்க்கலாம். இது நீங்கலாக செடிவகையில் நகமென்பது ஒன்று. முன் வகையை இங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் பெருங்கோரை, விலாமிச்சவேர், சிகப்பு சந்தனம் இவைகளைப் பொடி செய்து கொஞ்சம் தேன் சேர்த்துப் புகைபோடவும். நிர்குண்டியாதி—நொச்சித்தழை, குக்கில், கடுகு, வேப்பம்பட்டை, சாம்பிராணி, இவைகளைப் பொடிசெய்து புகைபோடவும். பாவபிரகாசம் கூறுவ தாவது—இந்நோயில் சகிக்கமுடியாத எரிச்சல் கண்டால் அப் பொழுது யௌவன ஸ்திரீகளின் சிச்ருஷையால் நன்மையுண்டா கும். உடம்புக்கேற்ற முறையில் பத்தியமான ஆகாரம் கொடுக்க வேண்டும். இனிவிப்ரமத்திற்குச் சிகித்சை சொல்லப்படுகிறது. பத்யாதி—கடுக்காய், பர்பாடகம், கடுகுரோகிணி, திராக்ஷை, தேவ தாரு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சரக்கொன்றைப்புளி, பேய்ப் புடல், கடுக்காய், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிடவும். ஹரீதக்யாதி—கடுக்காய், பர்பாடகம், ஹாரஹூரம், (இது சூரிய காந்தி எனப்படும்) காக்கணட்டான், கடுகுரோகிணி, கோரைக் கிழங்கு, சரக்கொன்றைப்புளி, தேவதாரு, பாரதி (இது விளங்க வில்லை) ஆகிய இவைகளின் கஷாயம் கொடுக்க நன்மை செய்யும்.

கஞ்ஜாதி—திப்பிலி, மிளகு, வசம்பு, இந்துப்பு, புங்கை விதை, ஞாழல், நெல்லி வற்றல், கடுக்காய், தான்றிக்காய், கடுகு, பெருங்காயம் (வெள்ளைக் காயம் எடுத்துக்கொள்ள வேண்டும்.) சுக்கு, இவைகளைச் சமஎடை எடுத்து வெள்ளாட்டு மூத்திரத்தால் அரைத்து குளிகை அல்லது மாத்திரையாகச் செய்து உலர்த்திக் கொண்டு சந்தனக்கல்லில் நீரில் உரைத்து அரைக்குன்றிஎடை கண்களிலிட பிரக்ஞையுண்டாகும். இதற்கு "ப்ரசேதநாவடி" எனப் பெயர். இது பாவப்ரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தலைசுற்றல், தலைநோய், கண்நோய், சித்தப்பிரமம், அபஸ்மாரம், முதலிய நோய்களில் நன்மை செய்யும். சிதாங்க சன்னிபாதம் அசாத்தியம். அதன் சிகித்சை. அர்கமூலாதி—எருக்கம் வேர், ஜீரகம், திரிகடு, சிறுதேக்கு, கண்டங்கத்திரி, சுக்கு, சாதாகோஷ்டம், இவைகளைச் சமஎடை எடுத்து கோமூத்திரம் விட்டு கஷாயம் செய்து கொடுக்கவும். ரஸாதி—ரஸம், வத்ஸநாபி, மிளகு, ஊமத்தங்காய் சாம்பல், இவைகளை முறையே ஒன்று, ஒன்று, நான்கு, எட்டு, பாகங்கள் எடுத்துக் கலந்து சரீரத்தில் பூச சன்னிகளில் வியர்வை, சைத்தியம், இவை விலகும். தாந்திரிக சிகித்சை. இந்த சன்னி உண்டானவுடன் கண் பார்வை குன்றிவிடும். இது அசாத்திய வகையைச் சேர்ந்தது. பார்ங்கியாதி—சிறுதேக்கு, சாதாகோஷ்டம், கடுக்காய், கண்டங்கத்திரி, சுக்கு, சீந்தில், ஆகிய இவைகளின் கஷாயம் சாப்பிடவும். ராஸ்நாதி—அரத்தை, மனோசிலை ரஸம், ரஸாஞ்சனம், ஆகிய இவைகளை அரைத்து குளிகை செய்து காயவைத்து கடுகளவு நீரில் உரைத்து கண்களில் அஞ்சனமிடவும். அமிருதாதி—சீந்தில், பேய்புடல், ஆடாதோடை, திரிகடு, இவைகளின் கஷாயம் உள்ளுக்குச் சாப்பிட நன்மை செய்யும். குஷ்டாதி—கோஷ்டம், பேய்க்கொம்மட்டி வேர், சுக்கு, மிளகு, மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, திப்பிலி, இவைகளைச் சமஎடை எடுத்து ஆட்டு மூத்திரத்தால் அரைத்து குளிகையாக உருட்டி ஓர் துணியில் வைத்துக்கட்டி மூக்கில் நஸ்யம் செய்யவும். கண்டகுப்ஜத்தின் சிகித்சை. த்ரிகடுகாதி—திரிகடு, வெப்பாலையரிசி, கடுகுரோகிணி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், ஆடாதோடை, மஞ்சள், மரமஞ்சள், ஆகிய இவைகளின் கஷாயம் சாப்பிட நன்மை

210247

யுண்டாம். ஸ்ருங்யாதி—கடுக்காய்ப்பூ (இதுவே கர்காடக ஸிருங்கி என்பர்) வெப்பாலைப்பட்டை, கடுக்காய், கோரைக்கிழங்கு, பூலாங் கிழங்கு, நிலவேம்பு, சிறு தேக்கு, மஞ்சள், கடுகு ரோகிணி, சாதா கோஷ்டம், கொடுவேலி, மிளகு, கண்டங்கத்திரி, ஆடாதோடை, நெல்லி வத்தல், தேவதாரு, தான்றிக்காய், செவ்வியம், சுக்கு, திப்பிலி, கட்பலம், ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்து கஷாயம் செய்து சாப்பிட நன்மையாம். க்ருஷ்ணாதி—திப்பிலி, நாயுருவி விதை இவைகளைச் சமயெடை எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து மூக்கில் நஸ்யமிடவும். த்ரிகடுகாதி—திரிகடு, பேய்ச்சுரை விதை, இவைகளைச் சமயெடை எடுத்துத் தண்ணீர்விட்டரைத்து மூக்கில் நஸ்யமிடவும். கர்ணக சிகித்சை. இவ்வகையில் அட்டைகளைக் கொண்டு ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். க்ருதபானம் நல்லது. இவை இரண்டும் இந்நோயில் காதுகளுக்கு அடிபாகத்தில் உண்டாகும் கட்டிகளில் நன்மை செய்யும். கட்டிகள் கண்டவுடன் அதில் அட்டைகளைவிட்டு ரக்தம் உறுஞ்சுபடி செய்யவேண்டும். பழைய நெய் திரிபலாக்ருதம், இவைகளைக் கொடுக்கவேண்டும். கபபித்தஹரமான பத்து போடவேண்டும். சமன சிகித்சை செய்ய வேண்டும். இனி அட்டைகளின் லக்ஷணம் சொல்லப்படுகிறது. பாசிப்பயறு இலைபோல முதுகும் சிகப்பான அடிவயிறும் ஆறு அங்குலம் நீளமுமுள்ள அட்டைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். ராஸ்நாதி—அரத்தை, கண்டங்கத்திரி, கடுக்காய், திரிகடு, கடுகு ரோகிணி; கோரைக்கிழங்கு, சாதாகோஷ்டம், கடுக்காய்பூ, தாரா, (இது விளங்கவில்லை) சிறுதேக்கு, இவைகளின் கஷாயம் உள்ளுக்கு கொடுக்க நன்மை செய்யும். மரிசாதி—மிளகு, தசமூலம், திப்பிலி, திரிபலை, மஞ்சள், சுக்கு, கடுகுரோகிணி, நிலவேப்பு, இவைகளைக் கஷாயம் செய்து இந்துப்பு சேர்த்துக் கொடுக்கவும். ஹிங்குவாதி பெருங்காயம், மஞ்சள், மரமஞ்சள், பேய்க்கொம்மட்டி, இந்துப்பு, தேவதாரு, கோஷ்டம், எருக்கம்பால், இவைகளைச் சமயெடை எடுத்து அரைத்துக் கட்டிகளில் பத்துபோட அமுங்கும். தசசதகாதி—எருக்கம்பால், சேங்கொட்டை, கருவாப்பட்டை, கொடுவேலி, சுண்ணாம்பு, சிவதைவேர், கோஷ்டம், அன்னபேதி, இவைகளைச் சமயெடை எடுத்து அரைத்து பத்துபோட ஏழு நாட்களில்

கட்டி அமுங்கும். லவ்ணாதி—இந்துப்பு, திப்பிலி, இவைகளைச் சமயெடை எடுத்து வெந்நீர்விட்டரைத்து மூக்கில் நஸ்யமிடவும். தந்தியாதி—நேர்வாளவேர், கொடுவேலி வேர், கள்ளிப்பால், எருக்கம்பால், சுண்ணாம்பு, சேங்கொட்டை, அன்னபேதி, ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்து அரைத்து கட்டிகளில் பத்து போடவும். நாகராதி—சுக்கு, தேவதாரு, அரத்தை, கொடுவேலி, இவைகளைச் சமயெடை எடுத்து அரைத்து பத்துபோட கழுத்தின் வீக்கம் தணியும். குலுத்தாதி—எள்ளு, கட்பலம், சுக்கு, ஜீரகம், இவைகளைச் சமயெடை எடுத்து அரைத்து உஷ்ணப்படுத்தி அடிக்கடி பத்துபோட கட்டி அமுங்கும். பீஜபூரகாதி—கொம்மட்டி மாதளை வேர் பட்டை, முன்னை, முட்காய் வேளை, நாயுருவிவேர், சுரைவேர், திப்பிலி, எட்டிக்கொட்டை, இவைகளைச் சமயெடை எடுத்து அரைத்து பத்து போடவும். ஹிடிம்பி என்பதை அரைத்து பத்து போடவும். (ஹிடிம்பி என்பது விளங்கவில்லை) வஜ்ரமுஷ்டி கிழங்கை அரைத்து பத்து போடவும். (வஜ்ரமுஷ்டி என்பது கரும்பிரண்டை என்பர்) தவக்களை யாமிசத்தால் வேதுகொடுத்து அதையே வைத்துக்கட்ட கட்டி அமுங்கும். வித்தார்த்தாதி—கடுகு, இந்துப்பு, வசம்பு, ஓட்டடை, சுக்கு, மஞ்சள், இவைகளைச் சமயெடை எடுத்து தண்ணீரால் அரைத்து பத்துபோட கட்டி உடைந்து சீழ் வெளியேறி கட்டி ஆறும். புக்நேத்ர சிகித்சை. தார்வியாதி—மரமஞ்சள், கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, திரிபலை, கண்டங்கத்திரி, பேய்ப்புடல், மஞ்சள், வேப்பம்பட்டை, ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிட நன்மையுண்டாம். பிரக்ஞை திரும்பும். பூதிப்பாதி—நிலவேம்பு, வசம்பு, திப்பிலி, மிளகு, உள்ளிப்பூண்டு, கடுகு, இவைகளைச் சமயெடை எடுத்து இடித்துப் பொடிசெய்து தேனில் சாப்பிடவும். இந்துப்பு, திப்பிலி, இவைகளைத் தண்ணீர் விட்டரைத்து கண்களிலிடவும். வசம்பு, மிளகு, பெருங்காயம், இலுப்பை வைரம், இவைகளைத் தண்ணீர் விட்டரைத்து நஸ்யமிடவும். மரிசாதி—மிளகு, அமுக்கரா, திப்பிலி, இந்துப்பு, உள்ளிப்பூண்டு, இலுப்பை வைரம், வசம்பு, இஞ்சி,

ஆகிய இவைகளை வெள்ளாட்டு நீரால் அரைத்து மூக்கில் நஸ்யமிடவும். ரக்தஷ்டீவி சிகித்சை—பர்படாதி—பர்பாடகம், சிறுகாஞ்சொரி, ஆடாதோடை, கந்தப்புல், கடுகு ரோகிணி, ஞாழல், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும். ஜலதாதி—கோரைக்கிழங்கு, பத்மகாஷ்டம், பர்பாடகம், செஞ்சந்தனம், ஜாதிவேர், திரிபலை, அதிமதுரம், வேப்பம்பட்டை, விலாமிச்சவேர், கொடுவேலி, வெள்ளைச் சந்தனம், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து தேன் சேர்த்துச் சாப்பிடவும். இனி ப்ரலாபகசிகித்சை சொல்லப்படுகிறது. தகாரதி—தகரவேர், அமுக்காவேர், பர்பாடகம், வெள்ளைக் காக்கணட்டான், தேவதாரு, கடுகு ரோகிணி, பாரதி, சடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, புன்கைப்பட்டை, கடுக்காய், திராக்ஷை, இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிடவும். ஜலதாராதி—கோரைக்கிழங்கு, தசமூலம், விலாமிச்சம்வேர், சுக்கு, செஞ்சந்தனம், புன்கைப்பட்டை, ஆடாதோடை, பர்பாடகம், இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிடவும். இனி ஜிஹ்வக சிகித்சை சொல்லப்படுகிறது. விம்ஹியாதி—கண்டங்கத்திரி, சுக்கு, சாதாகோஷ்டம், கடுகு ரோகிணி, அரத்தை, சீந்தில், சிறுதேக்கு, கடுக்காய்ப்பூ, பூலாங்கிழங்கு, சிறுகாஞ்சொரி, ஆடாதோடை, கோரைக்கிழங்கு, பிரம்மி, வசம்பு, நிலவேம்பு, ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிடவும். ஸூரதர் வாதி—தேவதாரு, கடுகுரோகிணி, வேப்பம்பட்டை, தான்றிக்காய், கடுக்காய், பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், சுக்கு, கண்டங்கத்திரி, சாதாகோஷ்டம், கோரைக்கிழங்கு, சீந்தில், ஆடாதோடை, ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிடவும். மிளகுபோன்ற தீக்ஷ்ண திரவியங்களுடன் இந்துப்பு சேர்த்து கொம்மட்டி மாதளை ரசத்தால் விழுதாகச்செய்து நாக்கில் தடவ நன்மையுண்டாம். அருசின் யாசத்தின் சிகித்சை சொல்லப்படுகிறது. ராமடாதி—பெருங்காயம், சுக்கு, இவைகளைச் சமயெடை பொடிசெய்து கரிப்பான் ரசத்தில் குழைத்துக் காலையில் சாப்பிடவும். காரம், கசப்பு, ரசமுள்ள வஸ்துக்களை உபயோகிக்க உணர்ச்சியுண்டாகும். மரிசாதி—மிளகு, இந்துப்பு, திப்பிலி, சடாமாஞ்சி, இலுப்பை, கட்பலம்,

இவைகளை ஜலம் விட்டு அரைத்து கொஞ்சம் தேன் சேர்த்து மூக்கில் நஸ்யம் செய்யவும். நான்கு அல்லது எட்டு சொட்டுகள்விட உணர்ச்சியுண்டாகும். லசுநாதி—உள்ளிப்பூண்டு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, வசம்பு, புரசம் விதை, சுக்கு, இவைகளைச் சமயெடை எடுத்து கோமூத்திரத்தால் அரைத்து மாத்திரையாக உருட்டிக் காயவைத்து கண்களில் அஞ்சனமிடவும். முன்சொன்ன அஞ்சண நஸ்யங்களால் பிரக்ஞை திரும்பாமலும் இரண்டு பாதங்களிலும் எரிச்சல் மிகுந்தும் இருக்கும்பொழுது நோயாளியின் நெற்றியில் சந்திரன்போல வட்டமாக இரும்பு சலாகையால் சூடுபோடுவது நன்மை செய்யும். சிருங்கியாதி—கடுக்காய்ப்பூ, சிறுகாஞ்சொரி, சாதாகோஷ்டம், சிறுதேக்கு, பூலாங்கிழங்கு, கண்டங்கத்திரி, இவைகளின் கஷாயம் சாப்பிட நன்மையுண்டாம். த்ராயந்தியாதி—மருக்கொன்னை, தசமூலம், சாதாகோஷ்டம், ஆமணக்குவேர், ஓமம், சிறுதேக்கு, சீந்தில், ஆடாதோடை, பூலாங்கிழங்கு, கடுக்காய்ப்பூ, திரிகடு, வெள்ளைச் சாரணத்தி, ஆகிய இவைகளைக் கஷாயம்செய்து அதில் கொஞ்சம் கோமூத்திரம் சேர்த்துச் சாப்பிடவும். மஞ்சிஷ்டாதி—மஞ்சிஷ்டி, கொடுவேலி, பில்வப்பிஞ்சு, பூலாங்கிழங்கு, சுக்கு, புன்னைப்பட்டை, மஞ்சள், மருக்கொன்னை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, மிளகு, திப்பிலி, ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து சாப்பிடவும். ஸிம்ஹியாதி—கண்டங்கத்திரி, பில்வப்பிஞ்சு, இந்துப்பு, சிறுகாஞ்சொரி, சுக்கு, சிறுபீளை, ஆமணக்கு வேர், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து கோமூத்திரம் சேர்த்துச் சாப்பிடவும் பாவப்பிரகாசத்தில் கூறப்பட்ட சிருங்கியாதி—கடுக்காய்ப்பூ, சிறுதேக்கு, கடுக்காய், ஜீரகம், திப்பிலி, நிலவேம்பு, பர்படகம், தேவதாரு, வசம்பு, கோஷ்டம், சிறுகாஞ்சொரி, கட்பலம், சுக்கு, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி விதை, கடுகுரோகிணி, வெப்பாலையரிசி, மலைதாங்கி வேர், அரேணுகம், யானைத்திப்பிலி, சாயுருவி, தேசாவரம், கொடுவேலி, பேய்க்கொம்பட்டி வேர், கொன்றைப்புளி, வேப்பம்பட்டை, பூலாங்கிழங்கு, கார்போகவரிசி, வாய்விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், ஓமம், காட்டு ஓமம், ஆகிய இவைகளைக் கஷாயம் செய்து அதில் பெருங்காயம், இஞ்சி ரஸம், இவைகளைச் சேர்த்துச் சாப்பிடவும். ஏற்கனவே முன்சொல்லப்பட்ட பார்

கியாதி கஷாயங்களும் மற்ற ஔஷதங்களும் இந்நோயில் கொடு
கலாம். மூச்சுக்காற்று உள்ள வரையிலும் மருந்து உ
செல்லுமளவும் மருந்தைக் கொடுத்து வரவேண்டும். ஈசுவர
சங்கல்பத்தை யாரும் அறியமுடியாது. அந்தகம் என்பது அசாத்
மாதலால் அதற்கு சிகித்சை சொல்லப்படவில்லை. குறிப்பு
13 வித சன்னிகளுக்கும் தனித்தனி சிகித்சைகள் இங்கு சொல்
பட்டன. அஞ்சனம், நஸ்யம், இவைகளும் சொல்லப்பட்ட
இவற்றுள் சில மருந்துகள் நீங்கலாக பல அனுபவத்தில்கண்ட
அஞ்சன மருந்துகளில் உலர்ந்த மருந்துகளைச் சமயெடைய
எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு பிறகு பச்
யான அதாவது ஈரமான சரக்குகளைச் சேர்த்து திரவம் சொல்
யிருந்தால் அந்த திரவத்தாலும் திரவம் சொல்லப்படாத இட
களில் தண்ணீராலும் கல்வத்திலிட்டு ஒன்றாக அரைத்து திரிபோ
நீளமாக உருட்டி வெய்யிலில் நன்றாகக் காயவைத்து எடுத்
தேவையானபோது ஓர் சிறு கல்லில் கொஞ்சம் தண்ணீர்விட்
உரைத்து மருந்துக்குத் தக்கவிதமாக கடுகு முதல் அரைக் குன்
வரை இரண்டு கண்களில் இடவும். இங்கு சொன்ன கஷாயங்க
முழுவதுமே குணமுள்ளவை. இந்த 13 சன்னிகளும் இ
டொன்று நீங்கலாக தத்காலம் காணப்படுகின்றன. இவைகளு
குரிய லக்ஷணங்கள் சுருக்கமாக சரகஸம்ஹிதையில் சொல்லப்பட
போதிலும் இதன் விஸ்தாரங்களும் பெயர்களும் தனிசிகித்சைகளு
பாவப்பிரகாசத்தில் தான் முதன் முதலில் காணப்படுகின்றன
சக்ரதத்தம்போன்ற நிபந்தங்கள் இவைகளைப்பற்றி ஒன்றுமே கூற
வில்லை. இந்த வகைகளை ஆங்கில வைத்தியத்தில் பொதுவா
டைபாயிட் என்று சொல்லுகின்றனர். இனி வரப்போகு
"ஸந்ததம்" என்ற ஜ்வரத்தின் குறிப்பில் இதைப்பற்றி விவரிப்
போம். பொதுவாகக் கூறமிடத்து இந்த சன்னிகள் 13 வகை
களும் நாட்டு வைத்திய நூல்களில்தான் விவரிக்கப்பட்டிருக்கின்
றன. இனி ஆகந்து ஜ்வரங்களுக்கு சிகித்சை சொல்லப்படுகிறது.
அபிசாரம், அபிசாபம், ஆகிய இவைகளால் வரும் ஜ்வரத்தில்
ஹோமம் முதலியவை நன்மை செய்யும். உத்பாதம், நவகிரஹ
பீடை, இவைகளால் வரும் ஜ்வரங்களுக்கு தானம், மந்திர ஜபம்,